வகுப்பு: 11 பொருளியல்
அலகுத் தேர்வு – 1, ஜூலை-2024

பகுதி -1

1 அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. இ) தேவையின் அளவும் அளிப்பின் அளயும் சன்ம்
2. இ) இராபின்ஸ்
3. அ) விலை
4. அ) தரவரிசை ஆய்வு
5. அ) படுகிடை
6. அ) சம நோக்கு வளைகோடுகள்
7. இ) விகித அளவு விளைவு விதி
8. அ) இறுதிநிலை உற்பத்தி
9. ஈ) உள்ளார்ந்தச் செலவு
10. அ) சமமாக

பகுதி -2

*ஏதேனும் 4 விளாக்களுக்கு விடையளிக்கவும்.(வினா எண். 16-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)*

11. பண்டங்கள் என்றால் என்ன?

- பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டும் மனித விருப்பங்களை பூர்த்தி செய்கின்றன.
- பொருளியலில் பண்டங்கள் என்பது குறிப்பிட்டு சொல்லப்படாதவரை, பணிகளையும் சேர்த்தே 'பண்டங்கள்' என்ற சொல் குறிக்கும்.
  - தொட்டுணரக் கூடியவை
  - மாற்றக் கூடியவை
  - உருவ வடிவமுடையவை
  - பரிமாற்ற மதிப்பு உடையவை

12. செலவை வரையறு?

- செலவு என்பது உற்பத்திச் செலவைக் குறிக்கும்.
- ஒரு பொருளை உற்பத்திச் செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்திச் செலவு ஆகும்.

13.விருப்பங்களை வகைப்படுத்துக.

- இன்றியமையாத விருப்பங்கள் – உணவு, உடை மற்றும் இருப்பிடம்
- வசதிக்கான விருப்பங்கள் – தொலைக்காட்சிப் பெட்டி, மின் விசிறி, குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டி போன்றவைகள்.
- ஆடம்பரத்திற்கான விருப்பங்கள் – நகைகள், வைரங்கள் மற்றும் விலை உயர்ந்த கார்கள்

14. கிஃபன் பொருட்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

- கிஃபன் பண்டங்கள் அல்லது தாழ்ந்த ரக பண்டங்கள் தேவை விதியின் விதிவிலக்காகும்.
- தாழ்ந்த ரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாக வாங்குவர். விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.
  - உதாரணமாக அரிசி, ராகி

15.காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு?

- ஏற்கனவே உள்ள ஓர் உற்பத்திக் காரணியின் அளவில் ஓர் அதிகரிப்பு செய்யும் போது, மொத்த உற்பத்தியில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு உற்பத்தியே இறுதி நிலை உற்பத்தி ஆகும்.
- இதனை MP = AN என குறிப்பிடலாம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- MP இறுதிநிலை உற்பத்தி
- மொத்த உற்பத்தியில் ஏற்படும் மாற்றம்
- AN உள்ளீடுகளின் அலகுகளில் ஏற்படும் மாற்றம்

- வேறு வகையில் கூறுவதனால் MP=TP(n) TP (n-1)
  - MP இறுதி நிலை உற்பத்தி
  - TP(n=n அலகு உள்ளீட்டு காரணிகளால் கிடைக்கும் மொத்த உற்பத்தி

**16.பொருளாதாரத்தில் நாம் படிக்கும் போது அடிப்படை பொருளியல் சிக்கல்கள் யாவை?**

- என்ன உற்பத்தி செய்வது?
- எவ்வாறு உற்பத்தி செய்வது?
- யாருக்காக உற்பத்தி செய்வது?

## பகுதி – III

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 22–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

**17. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?**

- பயன்பாடு உளவியல் சார்ந்தது
- பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல
- பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல
- பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்
- பயன்பாடானது மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது

**18. இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக.**

| இயல்புரை பொருளியல் | நெறியுரை பொருளியல் |
|---|---|
| உள்ளதை உள்ளவாறு கூறுகிறது | எதுவாக இருக்கவேண்டும் என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது |
| பிரச்சினையை உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது | முடிவுகள் உண்மையின் அடிப்படையில் அமைவதில்லை |
| ஏன் மற்றும் எப்படி என்பதை கூறுகிறது | எதுவாக இருக்க வேண்டும் என்பதை கூறுகிறது |

**19. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.**

- ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட, வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசமே நுகர்வோர் எச்சம் எனப்படும் – மார்ஷல்
- நுகர்வோர் எச்சம் = கொடுக்க நினைத்த விலை – உண்மையில் கொடுத்த விலை

**20.சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?**

- கீழ்நோக்கிய சரிவை கொண்டது
- தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்
- ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாது
- X அச்சையோ Y அச்சையோ தொடாது

**21. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?**

- முதன்மை உற்பத்தி காரணியாகும்
- செயலற்ற உற்பத்தி காரணியாகும்
- இயற்கையின் கொடை
- நிலத்திற்கு உற்பத்தி செலவு இல்லை
- நிலத்திலன் அளிப்பு மாறாதது, நெகிழ்ச்சியற்றது
- அழிவற்றது
- அசைவற்றது, இடமாற்றம் செய்ய முடியாதது

www.Padasalai.Net

22.பணச் செலவு உண்மைச் செலவு வேறுபாடுகளைக் கூறுக?

| பணச் செலவு | உண்மைச் செலவு |
|---|---|
| உற்பத்திச் செலவுகள் பணத்தால் குறிப்பிட்டால் அது பணச் செலவு | அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களுக்காக உடமையாளர்களுக்கு வாழுங்கப்படும் இழப்பீடு |
| கச்சாப் பொருள்களுக்கான செலவுகள், உழைப்பிற்கான கூலி, சம்பளம், வாடகை... போன்றவை அடங்கும் | நிலத்தைப் பயன்டுத்துவதால் நிலச்சுவாந்தர் சந்திக்கும் பல்வேறு முயற்சிகளும் முதலீட்டாளர் தங்கள் நுகர்வு துறப்பின் மூலம் சேமித்தவற்றை முதலீடு செய்வதும் உழைப்பாளர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை துறந்து ஈடுபடுவதும் உண்மைச் செலவில் அடங்கும் |

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x5=15

23. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

*1. செல்வ இலக்கணம் – ஆடம்ஸ்மித் (தொன்மை காலம் 1723–1790)*

- 'நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு' (1776) என்ற தனது நூலில் 'பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்' என்று வரையறுத்துள்ளார்.
- ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார்.
- சமுதாயத்தில் உள்ள தனி மனிதர்கள் தங்கள் சுய இலாபத்தை முன்னேற்ற விரும்புவதாக அவர் கருதுகிறார்.
- தனி மனிதர்கள் அவ்வாறு செயல்படும்போது அவர்களை திரைக்குப் பின்னா◌ருந்து ஒரு புலனாக உந்து சக்தி வழி நடத்துகிறது.
- ஒவ்வொரு மனிதனும் சுய ஆர்வத்தால் தூண்டப்படுவதாக ஸ்மித் கூறுகிறார்.

*2. நல இலக்கணம் – ஆல்ஃபிரட் மார்ஷல் (புதிய தொன்மை காலம் 1842–1924)*

- 'பொருளியல் கோட்பாடுகள்' (1890) என்ற நூலில் பொருளியலை ஆல்ஃபிரட் மார்ஷல் கீழ் வருமாறு வரையறுத்துள்ளார்.
- அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும்.
- பொருளியல் ஒரு புறம் செல்வத்தைப் பற்றியும், முக்கியமான மற்றொரு புறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது.

*3. பற்றாக்குறை இலக்கணம் –இலயனல் இராபின்ஸ் (புதிய யுகம்)*

- 'பொருளியல் அறிவிய◌ன் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை' என்ற தமது இலயனல் ராபின்ஸ் நூலை 1932–ல் வெளியிட்டார்.
- பொருளியல் என்பது 'விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக் கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே' என்று கூறுகிறார்.

4. வளர்ச்சி இலக்கணம் சாமுவேல்சன் (நவீன யுகம்)

- சாமுவேல்சன் 'பொருளாதாரம் ஒரு அறிமுக பகுப்பாய்வு' என்ற நூலை 1948–ல் வெளியிட்டார்.
- பொருளியல் என்பது. 'மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக் கூடிய பற்றாக்குறையான வளங்களைக்

www.Padasalai.Net

கொண்டு, பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்' என வரையறை செய்கிறார்.

**23. ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.**

**அறிமுகம்**

- ஆஸ்திரிய பொருளியல் வல்லுநரான H.H.காசன் என்பவர் இவ்விதியை 1854ல் பொருளியலில் முதன் முதலாக உருவாக்கினார்.
- ஜெவான்ஸ் இவ்விதியை 'காசனின் முதல் நுகர்வு விதி' என அழைத்தார்.
- ஆனால் மார்ஷல் இவ்விதியை புகழுடையச் செய்தார். ஏனெனில் இவ்விதியை எண்ணளவு ஆய்வின் அடிப்படையில் சரியாக முறைப்படுத்தினார்.
- இவ்விதி மனித விருப்பங்களின் பண்பான விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை என்பதனை அடிப்படையாகக் கொண்டது.

**மார்ஷலின் இலக்கணம்**

- ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது' என்று இவ்விதியை வரையறை செய்கிறார்.

**அனுமானங்கள்**

- பயன்பாடு எண்ணளவையில் அளவிடப்பட வேண்டும். உதாரணமாக 1, 2, 3 இவை போல.
- பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாது இருக்க வேண்டும்.
- நுகர்வோர் பகுத்தறிவாளராக இருக்க வேண்டும். மேலும் செலவைக் குறைப்பவராகவும் திருப்தியை அதிகப்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.
- நுகரப்படும் பண்ட அளவு ஒரே சீரானதாக இருக்க வேண்டும்.
- நுகரப்படும் பண்டத்தின் எல்லா அளவுகளும் ஒத்த தன்மை கொண்டவை. (உம்) எடை, தரம், சுவை, நிறம் போன்றவை.
- பண்டங்களை நுகரும் போது கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகர வேண்டும்.
- நுகரும் காலத்தில் நுகர்வோரது சுவைக்கும் பாங்கு, பழக்க வழக்கங்கள், தெரிவுகள், நாகரிகங்கள், வருமானம் மற்றும் நுகர்வோரின் குணாதிசயங்கள் மாறாது இருக்க வேண்டும்.

**வரைபடம்**




வரைபட விளக்கம்

- ஒரு நுகர்வோர் ஒரே பண்டத்தை தொடர்ந்து கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக நுகரும் போது ஒவ்வொரு கூடுதல் பொருளிருந்து கிடைக்கிற பயன்பாடு (இறுதிநிலைப் பயன்பாடு) குறைந்து செல்லும் என்று இவ்விதி விளக்குகிறது.
- அதாவது பண்டங்களின் கையிருப்பு அதிகரிக்கும் போது கூடுதல் பண்டங்களில் இருந்து பெறும் பயன்பாடு குறைந்து கொண்டு செல்லும்.

**இறுதிநிலைப் பயன்பாடு அட்டவணை**

| ஆப்பிள் அலகுகள் | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | 20 | 20 – |
| 2 | 35 | 15 (35–20) |
| 3 | 45 | 10 (45–35) |
| 4 | 50 | 5 (50–45) |
| 5 | 50 | 0 (50–50) |
| 6 | 45 | –5 (45–50) |
| 7 | 35 | –10 (35–45) |

**அட்டவணை – விளக்கம்**

- ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன் பின் ஒன்றாக நுகர விரும்புகிறார்.
- முதல் ஆப்பிளில் இருந்து அவர் பெற்ற பயன்பாடு 20 அலகுகள்.
- இரண்டாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடானது முதல் ஆப்பிளை விட குறைவானதாகும் (15 அலகுகள்).
- மூன்றாவது பண்டத்திருந்து கிடைக்கும் பயன்பாடு இரண்டாவது ஆப்பிள் பயன்பாட்டை விடக் குறைவு (10 அலகுகள்).
- மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து அவர் பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும்.

- மேலும் ஆறாவது, ஏழாவது ஆப்பிள்களை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறைப் பயன்பாடாகும். (விருப்பமில்லா நிலை அல்லது திகட்டும் நிலை).
- இந்தப் போக்கை கூறுவதே குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆகும்.

24. அ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.

- ஒரே ஒரு உள்ளீட்டினை மட்டும் அதிகப்படுத்தி, பிற உள்ளீடுகளை மாற்றாமல், உற்பத்தியைப் பெருக்க முயன்றால் மொத்த உற்பத்தி வளர் விகிதத்தில் உயர்ந்து பின்பு குறிப்பிட்ட புள்ளியில் நிலையான பின் குறைந்து செல்லும்.
- இறுதிநிலை உற்பத்தி எதிர்கணியமாக கடைசியில் காணப்படும்.

ஸ்டிக்ளரின் இலக்கணம்

'உற்பத்தி பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பிற காரணிகளின் அளவு நிலையாக இருக்கும் போது, ஓர் உற்பத்தி காரணி சம உயர்வாக அதிகரிக்கும் போது ஒரு குறிப்பிட்ட புள்ளிக்குப் பிறகு மொத்த உற்பத்தியின் அளவு குறையும். அதாவது இறுதி நிலை உற்பத்தி பூஜ்ஜியத்தை விட குறையும்'.

அனுமானங்கள்

- ஒரே ஒரு உற்பத்திக் காரணியின் அளவு மட்டும் உயர்த்தப்படுகிறது; ஏனைய உற்பத்திக் காரணிகளின் அளவு மாறாமல் இருக்கிறது.
- மாறும் உற்பத்திக் காரணிகள் ஒரே தன்மையுடையவை.
- உற்பத்திப் பொருளானது பரும் அலகுகளால் அளவிடப்படுகிறது.
- தொழில்நுட்ப நிலையில் மாற்றம் இல்லை.
- பொருளின் விலையில் மாற்றம் இல்லை.

மாறும் விகித விளைவில் உள்ள நிலைகளின் அட்டவணை

| மாறும் உள்ளீடுகளின் அலகுகள் (L) | மொத்த உற்பத்தி ($TP_L$) | இறுதிநிலை உற்பத்தி ($MP_L$) | சராசரி உற்பத்தி ($AP_L$) | நிலைகள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 2 | 2 | I |
| 2 | 6 | 4 | 3 | |
| 3 | 12 | 6 | 4 | |
| 4 | 16 | 4 | 5 | II |
| 5 | 18 | 2 | 3.6 | |
| 6 | 18 | 0 | 3 | III |
| 7 | 16 | 2 | 2.28 | |

மொத்த உற்பத்தி TP

- ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திக் காரணிகளின் கலவையை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்களின் அளவு மொத்த உற்பத்தியைக் குறிக்கும்.
- இறுதிநிலை உற்பத்தியின் கூட்டுத் தொகையே மொத்த உற்பத்தி ஆகும். அதாவது TP = EMP
  - இதில் TP =மொத்த உற்பத்தி ஈட இறுதிநிலை உற்பத்தி Σ= மொத்தம்

சராசரி உற்பத்தி (AP)

- மொத்த உற்பத்தியை உற்பத்தி காரணிகளின் அலகுகளால் வகுப்பதால் கிடைப்பது சராசரி உற்பத்தி ஆகும்.
- ஓர் அலகு உற்பத்தி காரணியின் சராசரி உற்பத்தித் திறனே சராசரி உற்பத்தி ஆகும்.

கணித ரீதியாக

AP = TP/ N இதில்

- AP = சராசரி உற்பத்தி
- TP மொத்த உற்பத்தி
- N = மொத்த உள்ளீடுகளின் அலகு

இறுதிநிலை உற்பத்தி (MP)

ஏற்கனவே உள்ள ஓர் உற்பத்திக் காரணியின் அளவில் ஓர் அதிகரிப்பு செய்யும் போது, மொத்த உற்பத்தியில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு உற்பத்தியே இறுதி நிலை உற்பத்தி ஆகும்.

இதனை MP $= \Delta TP / \Delta N$ என குறிப்பிடலாம்

www.Padasalai.Net

<u>மாறும் விகித விளைவு விதி வரைபடம்</u>




<u>வரைபட விளக்கம்</u>

★ உழைப்பாளர்களின் எண்ணிக்கை X அச்சிலும்.

★ TP, AP மற்றும் MP ஆகியவை Y அச்சிலும் குறிக்கப்பட்டுள்ளன.

★ மூன்று வகையான நிலைகளை வரைபடத்தின் மூலம் அறிந்துக்கொள்ளலாம்.

முதல்நிலை I

- முதலில் இறுதி நிலை உற்பத்தி மூன்று உழைப்பாளர்களை பயன்படுத்தும் வரை அதிகரிக்கின்றது.
- இது சராசரி உற்பத்தியை விட அதிகம்.
- எனவே, மொத்த உற்பத்தி வளர் விகிதத்தில் அதிகரிக்கும்.
- மொத்த உற்பத்தி தொடக்கத்தில் வளர் விகிதத்தில் அதிகரித்து, A என்ற புள்ளியை அடைந்து பின்பு குறைந்த விகிதத்தில் அதிகரிக்கின்றது.
- இப்புள்ளியே 'வளைவு மாற்றப் புள்ளி' ஆகும்.

இரண்டாம் நிலை II

- இரண்டாம் நிலையில் இறுதிநிலை உற்பத்தியானது குறைந்து 6 அலகு உழைப்பை பயன்படுத்தும் போது பூஜ்யமாகிறது.
- X–அச்சை வெட்டுகிறது.
- நான்காவது உழைப்பை பயன்படுத்தும் போது MPL =APL இதில் MPL வளைகோடானது APL
- நான்காவது உழைப்பை பயன்படுத்தும் போது MPL =AP$_2$1 இதில் ஙடக வளைகோடானது அடக வளைகோட்டை விட கீழ் அமையும்.
- IPL வளைகோடு குறைந்து செல் வீதத்தில் அதிகரிக்கும்.

மூன்றாம் நிலை III

- மூன்றாம் நிலையில் ஏழு அலகு உழைப்பாளர்களை பயன்படுத்தும் போது உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித் திறன் எதிர் கணியமாகும்.
- உழைப்பின் சராசரி உற்பத்தி திறன் குறைந்து சென்றாலும் நேர்மறை மதிப்பாகவே இருக்கும்.
- 6 அலகு உழைப்புடன் கூடுதலாக 1 அலகு உழைப்பை பயன்படுத்தும் போது TPL குறையத் தொடங்கும்.

<u>**24. ஆ) மொத்தச் செலவு = $10 + Q^3$. Q=5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.**</u>

<u>(i) மொத்தச் செலவு (TC)</u>

மொத்தச் செலவு = மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும் செலவு

TC = TFC + TVC

இதில் TC = மொத்தச் செலவு | TFC = மொத்த மாறாச் செலவு | TVC = மொத்த மாறும் செலவு

மொத்தச் செலவு (TC) = $10 + Q^3$

Q = 5

= $10 + (5)^3$

= 10 + 125

∴ மொத்தச் செலவு (TC) = 135

<u>(ii) மொத்த மாறும் செலவு (TVC)</u>

மொத்தச் செலவு (TC) = 135

மொத்த மாறாச் செலவு (TFC) = 10

மொத்த மாறும் செலவு (TVC) = ?

TC = TFC + TVC

135 = 10 + TVC

135 – 10 = TVC

∴ மொத்த மாறும் செலவு (TVC) = 125

<u>(iii) மொத்தம் மாறாச் செலவு (TFC)</u>

TC = TFC + TVC

மொத்தச் செலவு = மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும் செலவு

மொத்தச் செலவு (TC) = 135

மொத்த மாறாச் செலவு (TFC) = ?

மொத்த மாறும் செலவு (TVC) = 125

135 = x + 125

135 – 125 = 10

∴ மொத்த மாறாச் செலவு (TFC) = 10

<u>(iv) சராசரி மாறும் செலவு (AVC)</u>

$AVC = \frac{TVC}{Q}$

இதில் AVC = சராசரி மாறும் செலவு | TVC = மொத்த மாறும் செலவு | Q = உற்பத்தி அளவு

மொத்த மாறாச் செலவு (TFC) = 10

உற்பத்தி அளவு (Q) = 5

$AVC = \frac{125}{5}$

∴ சராசரி மாறும் செலவு (AVC) = 25

<u>(v) சராசரி மாறாச் செலவு (AFC)</u>

$AFC = \frac{TFC}{Q}$

இதில் AFC = சராசரி மாறாச் செலவு | TFC = மொத்த மாறாச் செலவு | Q = உற்பத்தி அலகுகள்

மொத்த மாறாச் செலவு (TFC) = 10

உற்பத்தி அலகுகள் = 5

$AFC = \frac{10}{5}$

∴ சராசரி மாறாச் செலவு (AFC) = 2

<u>(vi) சராசரி செலவு (AC)</u>

AC = AFC + AVC

இதில் AC = சராசரி செலவு | AFC = சராசரி மாறாச் செலவு | AVC = சராசரி மாறும் செலவு

சராசரி மாறாச் செலவு (AFC) = 2

சராசரி மாறும் செலவு (AVC) = 25

= 2 + 25

∴ சராசரி செலவு (AC) = 27

**25. அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.**

**முன்னுரை**

- தேவை விதியை முதலில் 1838 – ல் அகஸ்டின் கூர்னாட் விளக்கினார்.
- பிறகு ஆல்ஃப்ரட் மார்ஷல் இதைச் சீர்படுத்தி விரிவாக்கினார்.

**இலக்கணங்கள்**

***மார்ஷல்***

- விலை குறையும் போது தேவையின் அளவு அதிகரிக்கிறது, விலை அதிகரிக்கும் போது தேவையின் அளவு குறைகிறது' என தேவை விதியை வரையறுக்கிறார்.

***சாமுவேல்சன்***

- 'மற்றவை மாறாமல் இருக்கும் போது, ஒரு பொருளுக்கான விலை குறையும் போது மக்கள் அப்பொருளை அதிகம் வாங்குவர், விலை ஏறும் போது குறைவாக வாங்குவர்.

**தேவை விதியின் விதி விலக்குகள்**

பொதுவான தேவை வளைகோடு இடமிருந்து வலமாக கீழ்நோக்கிச் சரியும். ஆனால் சில விதிவிலக்கு தேவைக் கோடுகள் இந்த விதிக்கு கட்டுப்படாமல் மாறிச் செயல்படும்; குறிப்பிட்ட சில பண்டங்களின் விலை குறைவு தேவை சுருக்கத்தையும், விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவைக்கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவைக்கோடு என அழைக்கப்படுகிறது.




வரைபடம் 2.6

வரைபடம் 2.6 இல் DD என்பது இடமிருந்து வலமாக மேல் நோக்கி உயரும் தேவைக் கோட்டைக் குறிக்கிறது. OP விலையில் தேவை OQ அளவில் உள்ளது. விலை. OP, அளவிற்கு உயரும் போது தேவையும் OQ, அளவிற்கு உயருகிறது. இந்த மேல் நோக்கிச் செல்லும் தேவைக் கோடு, தேவை விதியை விட்டு விலகிச் சென்று விதிவிலக்காக உள்ளது.

**25. ஆ) அகச்சிக்களங்கள், புறச்சிக்களங்களை விவரி.**

**1. அகச் சிக்கனங்கள்**

- அகச்சிக்கனம் என்பது நிறுவனம் பொருளின் உற்பத்தி செலவினை குறைத்து பெறும் நன்மையினை குறிக்கும்.
- நிறுவனமானது புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதாலும் புதிய முதலீட்டை உருவாக்குவதாலும் மேலாண்மை திறனை மேம்படுத்துவதாலும் உற்பத்தி செலவினை குறைக்கிறது.
- இது பல வகைப்படும்.

***தொழில்நுட்ப சிக்கனங்கள்***

- நிறுவனத்தின் அளவு பெரிய அளவாக இருப்பதால் கிடைக்கும் மூலதனமும் அதிகமாக இருக்கும்.
- இதனால் ஒரு நிறுவனம் நவீன நுட்பங்களை புகுத்த முடியும். எனவே இதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும்.
- மேலும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியினால் உற்பத்தியின் தரத்தை உயர்த்த முடியும்.

***நிதிச் சிக்கனங்கள்***

- பெரிய நிறுவனங்கள் சந்தையில் பங்கு விற்பனை மூலம் மூலதன பெருக்கத்தை ஏற்படுத்தலாம்.
- ஆனால் சிறிய நிறுவனங்கள் எளிதாக பங்கு விற்பனையை செய்ய இயலாது.

***மேலாண்மை சிக்கனங்கள்***

- பேரளவு உற்பத்தி வேலைப்பகுப்பு முறைக்கு உதவுகிறது.
- இதன் மூலம் சரியான வேலையாட்கள் சரியான துறையில் இருப்பார்கள்.

***உழைப்புச் சிக்கனங்கள்***

- பேரளவு உற்பத்தி வேலை பகுப்பு முறைக்கு வழிவகுக்கிறது. இதனை சிறப்பு உழைப்பு எனலாம்.

www.Padasalai.Net

- இது உழைப்பின் தரம் மற்றும் திறனை அதிகரிக்கும். நிறுவனத்தின் உற்பத்தி திறன் இதனால் அதிகரிக்கும்.

*சந்தை சார்ந்த சிக்கனங்கள்*

- பேரளவு உற்பத்தியின் காரணமாக மூலப் பொருட்களை குறைந்த விலைக்கு வாங்க இயலும். தொலைதூர சந்தையில் பொருட்களை விற்க முடியும். இது உற்பத்தியாளரின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கிறது.

*சந்தையில் தொடர்ந்திருப்பதன் சிக்கனங்கள்*

- பெரிய நிறுவனங்கள் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யலாம்.
- உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளின் சந்தையில் தோல்வியுற்று இழப்பு ஏற்பட்டாலும் வேறொரு பொருளின் இலாபத்தினால் இழப்பினை ஈடு செய்ய முடியும்.
- ஒரே பொருளை மட்டும் உற்பத்தி செய்யும் சிறிய நிறுவனங்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை.

II. புறச் சிக்கனங்கள்

- புறச் சிக்கனங்கள் என்பது நிறுவனத்திற்கு வெளியே ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தியின் முறைகளில் ஏற்படும் மேம்பாடுகளைக் குறிக்கும்.
- இது ஒரு நிறுவனம் மட்டும் பெறும் நன்மை அல்லாது, அனைத்து நிறுவனங்களும் பெறும் பயனாகும்.

முக்கியமான புறச்சிக்கனங்களை

- மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்
- வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்
- நகரியல் வளர்ச்சி
- தகவல் மற்றும் தொலை தொடர்பு வளர்ச்சி

---

தொகுப்பு: லா. பிரகாஷ் மு.க. ஆசிரியர் – பொருளியல் (தூய கபிரியல் மேல்நிலைப் பள்ளி, பிராட்வே – சென்னை 108)

www.Padasalai.Net